**கவனிக்க**.- *2008.03.07 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1541 - 2008 මාර්තු 14 වැනි සිකුරාදා - 2008.03.14

*1541 ஆம் இலக்கம் - 2008 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 260 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 261 |


**கவனிக்க**.- (i) சூழல் பேணல் அறவீடு (திருத்தம்) சட்டமூலம் 2008, சனவரி 25 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(ii) இறைச்சிக் கடைக்காரர் கட்டளைச்சட்டம் (திருத்தம்) சட்டமூலம் 2008, சனவரி 25 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(iii) உள்நாட்டு இறைவரி (திருத்தம்) சட்டமூலம் 2008, சனவரி 25 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

**கவனிக்க**.- இவ்வர்த்தமானியின் பகுதி V இல், 2003, யூலை தொடக்கம் செத்தெம்பர் வரையான காலப்பகுதிக்குரிய அச்சீட்டாளர்கள் மற்றும் வெளியீட்டாளர்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டதான புத்தகப் பட்டியலொன்று ஆங்கில மொழியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள்* ***வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.*** *வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏலவிற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும், பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.*

*வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்*** *இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2008, மாச்சு 19 ஆந் தேதி புதன்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2008, மாச்சு 07 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2008 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத்தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்தகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்;ராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்;ராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் .

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந்தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

தமிழ் மொழியில் பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி

இங்கு கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளுக்குள் உள்ள தமிழ் மொழிமூல பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுகளுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக ஆண்/பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் கூட்டுறவுச் சங்கக் கடைகள் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2008, சித்திரை மாதம் 11 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம், குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 280, பிரதான வீதி,
கொழும்பு 11,
2008, பெப்புருவரி 26.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| 1. காலி | கடவச்சர | காலி முகத்துவார அரச வைத்தியசாலை பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி (தமிழ்) | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , காலி. |
| 2. காலி | கடவச்சர | காலி கராப்பிட்டி அரச வைத்தியசாலை பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி (தமிழ்) | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , காலி. |

3-403

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## கால்நடைவள அபிவிருத்தி அமைச்சு

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்

### இலங்கை தொழில்நுட்ப சேவையின் II ஆம் வகுப்பு "ஆ" தரத்திற்கு ஆராய்ச்சி உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2008

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் II ஆம் வகுப்பு "ஆ" தரத்திற்கு ஆராய்ச்சி உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சையின் பொருட்டு கால்நடை உற்பத்தி, சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **பரீட்சை**.- இப்பரீட்சை 2008, மே மாதம் கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் கண்டியில் நடாத்தப்படும். இப்பரீட்சையினை ஒத்திப்போடுவதற்கும் அல்லது இரத்துச் செய்வதற்கும் கால்நடை உற்பத்தி, சுகாதார பணிப்பாளர் நாயகத்திற்கு அதிகாரம் உண்டு.

3. **சேவை நிபந்தனைகள்**.- அரசாங்க சேவையில் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும் இங்கு கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கும் அமைவாக தொழில்நுட்ப உதவியாளர் சேவையின் II ஆம் வகுப்பு "ஆ" தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும் :-

(i) தீவின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு உட்படுத்தப் படுவர் என்ற நிபந்தனையின் பேரிலேயே உத்தியோகத்தர் நியமிக்கப்படுவார்.

(ii) திறந்த ஆட்சேர்ப்பின் கீழ் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் மூன்று வருட தகுதிகூர் காலத்திற்கு உட்படுதல் வேண்டும். அரசாங்க சேவைப்பதவி ஒன்றில் உறுதிப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படுவாரேயாயின் அது தொடர்பில் நியமனமானது ஒரு வருட பரீட்சார்த்த காலப்பகுதக்கு உட்பட்டதாக அமையும். திறந்த ஆட்சேர்ப்பின் கீழ் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் அத்தகைய பதவியில் உறுதிப்படுத்துவதற்கு முன்னர் விதித்துரைத்த முதலாவது வினைத்திறன் தடைப்பரீட்சையில் சித்தி எய்துதல் வேண்டும்.

(iii) அரசாங்க சேவைக்கு ஈர்ப்புச் செய்துகொள்ளப்படுகின்ற உத்தியோகத்தர்கள் யாவரும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட அரசகரும மொழிக்கும் மேலாக ஏனைய அரசகரும மொழித் தொடர்பிலும் திறனை சேவையில் சேர்ந்து 5 வருடத்தினுள் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(iv) நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்புரையிற்கும் தாபன விதிக் கோவையின் ஒழுங்குவிதிகளுக்கும் நிதிப்பிரமாணத்திற்கும் அரசாங்கத்தால் அவ்வப்போது பிறப்பிக்கப்படுகின்ற பிரமாணங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் அமைச்சு மற்றும் திணைக்களம் என்பவற்றின் பணிப்புரைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

4. **சம்பளத்திட்டம்**.- MT-2-2006 A – ரூபா 14,570 – 10 x 170 – 11 x 180 – 6 x 240 – 14 x 320 – ரூபா 24,170. (பொ. நி. சு. 6/2006 (IV) இற்கு அமைய மாதாந்தம்)

இச்சம்பளத் திட்டத்தில் ரூபா 14,570 – 10 x 170 – ரூபா 16,270 சம்பளப் படிமுறையும் இத்தரத்திற்கு உரியதாகும்.

வகுப்பு II "ஆ" வில் உள்ள உத்தியோகத்தர்கள் இயைபுடைய வேதன அளவுத்திட்டத்தின் III ஆம் வேதன அளவு நிலையை எய்துவதற்கு முன்னர் முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும்.

5. **வயதெல்லை**.- (i) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அன்று வயது 18 இற்குக் குறையாமலும் 45 இனை விஞ்சி விடாமலும் இருத்தல் வேண்டும். (உச்ச வயதெல்லை ஏலவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு ஏற்புடையதாகாது)

(ii) விண்ணப்பகாரர் அனைவரும் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்

(iii) தேகாரோக்கியமுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

6. **கல்வித் தகைமைகள்**.- இலங்கை கால்நடை வளர்ப்பு பாடசாலையில் இருந்து டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

மொழி அல்லது இலக்கியம் மற்றும் எண்கணிதம்/ கணிதப் பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சித்தியடைந்து இருத்தல்.

அல்லது

அதற்குச் சமமானதோர் பரீட்சையில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் இருந்து டிப்ளோமா பெற்றுக்கொள்ளப்பட்டவர்கள் அப்பல்கலைக்கழகத்தில் அந்த டிப்ளோமாவிற்குரிய அடிப்படை பாடநெறியில் சித்தியெய்திருந்தால் க. பொ. த. (சா. த.) சித்தி பெறவேண்டும் என்பதில் இருந்து விலக்களிக்கப்படும்.

7. **ஆட்சேர்ப்பு முறைமை**.- ஆரம்பத் தகைமைகளைப் பெற்றிருக்கும் விண்ணப்பக்காரர் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தி னூடாக நடாத்தப்படுகின்ற பொதுப் போட்டிப் பரீட்சையில் அமர்தல் வேண்டும்.

(i) பொதுப் போட்டிப் பரீட்சைக்குரிய அனைத்து வினாப்பத்திரத்திலும் 40% புள்ளிகளை அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுக்கொள்கின்ற விண்ணப்பக்காரர் நேர்முகப் பரீட்சைக்கு திறமை அடிப்படையில் அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சைக்காக எவ்வித புள்ளிகளும் வழங்கப்படமாட்டாது. தகைமைகளை உறுதி செய்துகொண்டு விண்ணப்பகாரர் பரீட்சையின்போது பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் திறமை ஒழுங்கில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

*பரீட்சை :*

(i) இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படும்.

(ii) விண்ணப்பக்காரர் தான் விரும்பும் மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றலாம்.

(iii) பரீட்சையின்போது மொழி மூலத்தினை எக்காரணம் கொண்டும் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

(iv) *பரீட்சைக் கட்டணம்.-* விண்ணப்பக்காரர் பரீட்சைக் கட்டணமாக 300 ரூபாவினை பேராதனையில் அமைந்துள்ள தபால் கந்தோரில் மாற்றத்தக்கவாறு எந்தவொரு தபால் பணிமனையிலும் செலுத்தி "கால்நடை உற்பத்தி, சுகாதார பணிப்பாளர் நாயகம்" எனும் பெயரில் காசுக்கட்டளை ஒன்று பெற்று விண்ணப்பத்தில் உரிய இடத்தில் ஒட்டி அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

(v) *பரீட்சைப் பாடங்கள் :-* பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டது.

(அ) விவேகம்
(ஆ) தொழில்நுட்பவியல்

(vi) *பாடத்திட்டம் :*

(அ) விவேகப் பரீட்சை (நேரம் : 1 மணித்தியாலம்)- மொத்தப் புள்ளிகள் 100.
இதில் விண்ணப்பக்காரர் தர்க்கரீதியாக சிந்திக்கும் ஆற்றல் அவரது சிந்தனையின் பகுப்பாய்வு அம்சங்கள், தீர்மானம் எடுக்கும் திறன், சீர்தூக்கிப் பார்க்கும் வல்லமை என்பன அடைங்கலான வினாக்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

(ஆ) தொழில்நுட்பவியல் (நேரம் : 1 மணித்தியாலம்)- மொத்தப் புள்ளிகள் 100.
இவ்வினாப்பத்திரத்தில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டிக்கும் :-

(i) ஆய்வுகூட உபகரணங்களை இனங்காணுதலும் அவற்றினை பராமரித்தலும்
(ii) நோயை கண்டறியும் பொருட்டு செய்யப்பட வேண்டிய ஆய்வு முறைகள் :

நோயியல் (Pathology)
ஒட்டுண்ணியியல் (Parasitology)
நுண்ணுயிரியல் (Microbiology)
நீர்பாயவியல் (Serology)
போஷணை (Nutrition)

(iii) தரத்தினை நிர்ணயிக்க மேற்கொள்ளப்படும் ஆய்வு முறைகள்
பௌதீகப் பரிசோதனை
இரசாயனப் பரிசோதனை
புலன் பரிசோதனை
(iv) ஆய்வுகூடத்தைக் கவனமாகப் பேணுதல், கிருமி அழித்தல்.
(v) மாதிரி பெற்றுக்கொள்ளல், களஞ்சியப் படுத்தல் கொண்டுசெல்லல்.

9. ***விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படும் முறை.-*** (i) இவ்வறிவித்தலுக்கு அமைவாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய 8 1/2" x 12" அளவிலான A4 கடதாசியில் இரு பக்கங்களினையும் பிரயோகித்து தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2008.04.10 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கத்தக்கவாறு "பணிப்பாளர் நாயகம், கால்நடை உற்பத்தி, சுகாதாரத் தணிணக்களம், த. பெ. இலக்கம் 13, கெடம்பே, பேராதனை" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பத்தை உள்ளிட்டு அனுப்பும் கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் "ஆராய்ச்சி உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை" எனும் வாசகம் தெளிவாக எழுதப்படுதல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**குறிப்பு.-** அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பக்காரர் தமது விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவரினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(ii) சகல தேவைப்பாடுகளையும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலிடுகையின்போது விண்ணப்பங்கள் காணாமல் போதல் அல்லது தாமதமாகி விடுதல் போன்ற எவ்வித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(iii) விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பக்காரருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் பரீட்சை ஆரம்பிப்பதற்கு 4 நாட்களுக்கு முன்னர் கிடைக்கப்பெறாதவிடத்து பின்வரும் விபரங்களுடன் உடனடியாக கால்நடை உற்பத்தி சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்துடன் தொடர்பு கொள்க :-

(அ) விண்ணப்பக்காரரது முழுப்பெயர் ;
(ஆ) முகவரி ;
(இ) விண்ணப்பம் தபாலிட்ட திகதி, பதிவு இலக்கம், தபாற் பணிமனை.

10. விண்ணப்பக்காரர் பின்வரும் ஆவணங்களின் ஒளிப்படப் பிரதியினை (photo copy) விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும் :-

(அ) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்
(ஆ) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.

**விண்ணப்பக்காரரது ஆளடையாளம்.-** பரீட்சைக்குத் தோற்றும் விண்ணபக்காரர் யாவரும் பரீட்சை நிலையத்தில் தமது ஆளடையாளத்தினை பரீட்சை நிலைய பொறுப்பதிகாரி திருப்தியுறும் வகையில் உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன்பொருட்டு பின்வருவன ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை
(ஆ) ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய கடவுச்சீட்டு (பரீட்சை தினத்திற்கு 3 வருடத்திற்கு முன்னர் வழங்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்)

**பிழையான தகவல்களை வழங்குதல்.-** இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பக்காரர் உரிய தகைமைகளைக் கொண்டிராமை கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சைக்கு முன்னர், பரீட்சையின்போது அல்லது பரீட்சையின் பின்னர் எச்சந்தர்ப்பத்திலாயினும் அவருடைய விண்ணப்ப தகைமை இரத்துச் செய்யப்பட இடமுண்டு. விண்ணப்பகாரர் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் ஏதாவது பிழையானது என தெரிந்திருந்தும் சமர்ப்பித்து இருப்பாராயின் அவர் சேவையில் நின்றும் நிறுத்தப்படுவதற்கு இடமுண்டு.

இவ்வர்த்தமானி பத்திரிகையில் பகுதி I : தொகுதி (II அ) இன் ஆரம்பத்தில் காட்டப்பட்டுள்ள அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடையதாகும் பொது நிபந்தனை மற்றும் பரீட்சார்த்திகளுக்கான விதிகள் அறிவுறுத்தல்கள்பால் உங்கள் கவனத்தை ஈர்ப்பதுடன் அவற்றினை பின்பற்றவும்.

11. இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதாவது விடயம் தொடர்பில் பிரச்சினைகள் ஏற்படுமாயின் அது தொடர்பிலும் தீர்மானம்

எடுக்கும் அதிகாரம் கால்நடை உற்பத்தி சுகாதார சேவை பணிப்பாளர் நாயகத்திற்கே உரியதாகும். அதுவே இறுதித் தீர்வாகும்.

எச். எம். எஸ். பி. ஹேரத்,
கால்நடை உற்பத்தி, சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம்.

கால்நடை உற்பத்தி, சுகாதார சேவைத் திணைக்களம்,
பேராதனை,
2008.02.05.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கால்நடைவள அபிவிருத்தி அமைச்சு**

***கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்***

*இலங்கை தொழில்நுட்ப சேவையின் II ஆம் வகுப்பு 'ஆ' தரத்திற்கு ஆராய்ச்சி உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் தொடர்பான விண்ணப்பம் - 2008*

[ ]
அலுவலக உபயோகத்திற்கு

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
(உரிய இலக்கத்தை அடைப்பில் எழுதுக)

சிங்களம் - 02
தமிழ் - 03
ஆங்கிலம் - 04

1. பெயர் :-
   1.1 முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) :-----.
   (உதாரணம் SILVA, B.A.)
   1.2 முழுப் பெயர் (தமிழில்) :-----.
   1.3 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

2. முகவரி :-
   2.1 தனிப்பட்ட :-----.
   2.2 அலுவலக :-----.
   2.3 தபால் முகவரி :-----.

3. 3.1 பால் (உரிய அடைப்பில் '✓' அடையாளம் இடுக) :-

   ஆண்
   பெண்

   3.2 பிறந்த திகதி :-

   ஆண்டு : மாதம் : திகதி :

   3.3 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதியன்று வயது :-

   வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :

   3.4 குடியியல் நிலை (உரிய அடைப்பில் '✓' அடையாளம் இடுக) :-

   விவாகமானவர் :
   விவாகமாகாதவர் :

4. கல்வித் தகைமைகள் :-

   4.1 க. பொ. த. (சா. த.) பரீட்சை :-

   வருடம் :-----. மாதம் :-----.

| விடயம் | பெற்ற தரம் | சுட்டெண் |
|---|---|---|
| | | |

   4.2 (அ) கால்நடை வளர்ப்பு டிப்ளோமா பெறப்பட்ட நிறுவகம் :-----.
   (ஆ) கால்நடை வளர்ப்பு டிப்ளோமா பெற்ற திகதி :-----.

5. தற்போதைய தொழில் மற்றும் முன்னைய நியமனங்கள் (இருப்பின்) மாத்திரம் :-

| பதவி | நிறுவனம் | முதல் | வரை |
|---|---|---|---|
| | | | |

6. பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபால் பணிமனையின் பெயர் :-

   காசுக்கட்டளை இலக்கம் :-----.

> பரீட்சைக் கட்டணமாக 300 ரூபாவினை தீவின் எந்தவொரு தபால் பணிமனையிலும் 'கால்நடை உற்பத்தி, சுகாதார பணிப்பாளர் நாயகம்' எனும் பெயருக்கு செலுத்தவும்.
> மாற்றக்கூடிய பணிமனை – பேராதனை
>
> பற்றுச்சீட்டினை இங்கு ஒட்டவும்.

7. இவ்விண்ணப்பத்தில் என்னால் முன்வைக்கப்பட்ட விடயங்கள் உண்மையானதும் சரியானதும் என்பதை உறுதியுரைக்கின்றேன். இங்கு தரப்பட்டுள்ள விபரங்களில் ஏதாவது உண்மையற்றது அல்லது பிழையானது என நான் தெரிவு செய்வதற்கு முன் அறியப்படுமிடத்து நான் தகைமையற்றவனாகுவதுடன், தெரிவு செய்த பின்னர் அவ்வாறு தெரியப்படுமிடத்து எத்தகைய நட்டஈடும் வழங்கப்படாது சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

-----,
விண்ணப்பகாரரது கையொப்பம்.

திகதி :-----.

(தற்போது அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு மாத்திரம்)

**திணைக்களத் தலைவரினது சான்றிதழ்**

உத்தியோகத்தரால் மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் பரீட்சிக்கப் பட்டது எனவும் அவை சரியானது எனவும் இவ்வுத்தியோகத்தர் மேற்குறிப்பிடப்பட்ட பதவியின் பொருட்டு தெரிவு செய்யப்படுமிடத்து அவர் தற்போது வகிக்கும் பதவியில் இருந்து விடுவிப்புச் செய்ய முடியும்/ முடியாது எனவும் சான்றுபடுத்துகின்றேன்.

-----,
திணைக்களத் தலைவர்.
(அலுவலக முத்திரை)

பதவிப் பெயர் :-----.
முகவரி :-----.
திகதி :-----.

3-297

---

**கால்நடைவள அபிவிருத்தி அமைச்சு**

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்

**இலங்கை கால்நடை வள அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் II ஆம் வகுப்பு 'ஆ' தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2008**

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் இலங்கை கால்நடை வள அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் II ஆம் வகுப்பு "ஆ" தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சையின் பொருட்டு கால்நடை உற்பத்தி, சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **பரீட்சை**.- இப்பரீட்சை 2008, மே மாதம் கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் கண்டியில் நடாத்தப்படும். இப்பரீட்சையினை ஒத்திப்போடுவதற்கும் அல்லது இரத்துச் செய்வதற்கும் கால்நடை உற்பத்தி, சுகாதார பணிப்பாளர் நாயகத்திற்கு அதிகாரம் உண்டு.

**சேவை நிபந்தனைகள்**.- அரசாங்க சேவையில் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும் இங்கு கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கும் அமைவாக கால்நடை வள அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் II ஆம் வகுப்பு "ஆ" தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும் :-

(i) தீவின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு உட்படுத்தப் படுவர் என்ற நிபந்தனையின் பேரிலேயே உத்தியோகத்தர் நியமிக்கப்படுவார்.

(ii) திறந்த ஆட்சேர்ப்பின் கீழ் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் மூன்று வருட தகுதிகூர் காலத்திற்கு உட்படுதல் வேண்டும். அரசாங்க சேவைப்பதவி ஒன்றில் உறுதிப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படுவாரேயாயின் அது தொடர்பில் நியமனமானது ஒரு வருட பரீட்சார்த்த காலப்பகுதிக்கு உட்பட்டதாக அமையும். திறந்த ஆட்சேர்ப்பின் கீழ் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் அத்தகைய பதவியில் உறுதிப்படுத்துவதற்கு முன்னர் விதித்துரைத்த முதலாவது வினைத்திறன் தடைப்பரீட்சையில் சித்தி எய்துதல் வேண்டும்.

(iii) திறந்த ஆட்சேர்ப்பின் கீழ் ஆங்கில மொழி மூலம் அரசாங்க சேவைக்கு ஈர்த்துக் கொள்ளப்படும் உத்தியோகத்தர்கள் பதவியில் உறுதிப்படுத்துவதற்குரிய ஏனைய விடயங்களுக்கும் மேலாக தகுதிகூர் காலப்பகுதியினுள் அரச கரும மொழியில் ஏதாவது ஒன்றில் அதாவது சிங்களத்தில் அல்லது தமிழில் தேர்ச்சியை அடைந்துகொள்ளுதல் வேண்டும். அரசகரும மொழித் தேர்ச்சிப் பரீடசையில் இருந்து விலக்களிக்கப் படுவதை நாடும் உத்தியோகத்தர்கள் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழியில் சித்தியடைந்துள்ளார் என்பதற்கு சான்றாக இலங்கைப் பரீட்சைத் திணைக் களத்தினால் வழங்கப்படுகின்ற பெறுபேற்று தாளின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியினை அல்லது மூலப் பிரதியினை சமர்ப்பித்தல் வேண்டும்.

(iv) நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்புரையிற்கும் தாபன விதிக்கோவை யின் ஒழுங்குவிதிகளுக்கும் நிதிப்பிரமாணத்திற்கும் அரசாங்கத்தால் அவ்வப்போது பிறப்பிக்கப்படுகின்ற பிரமாணங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் அமைச்சு மற்றும் திணைக்களம் என்பவற்றின் பணிப்புரைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

4. **சம்பளத்திட்டம்**.- MT-2-2006 A – ரூபா 14,570 – 10 x 170 – 11 x 180 – 6 x 240 – 14 x 320 – ரூபா 24,170. (பொ. நி. சு. 6/2006 (IV) இற்கு அமைய மாதாந்தம் வகுப்பு II ''ஆ'' வில் உள்ள உத்தியோகத்தர்கள் இயைபுடைய வேதன அளவுத்திட்டத்தின் IV ஆம் வேதன அளவு நிலையை எய்துவதற்கு முன்னர் முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும்.

5. **வயதெல்லை**.- (i) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அன்று வயது 21 இற்குக் குறையாமலும் 35 இனை விஞ்சி விடாமலும் இருத்தல் வேண்டும். (உச்ச வயதெல்லை ஏலவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு ஏற்புடையதாகாது)

(ii) விண்ணப்பகாரர் அனைவரும் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்

(iii) தேகாரோக்கியமுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

6. **கல்வித் தகைமைகள்**.- 2008.04.10 ஆந் திகதியன்று பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும். தூயகணிதம், பிரயோக கணிதம், பௌதீகவியல், இரசாயனவியல், இணைந்த கணிதம், உயிரியல் விஞ்ஞானம், விவசாயம் ஆகிய பாடங்களுள் இரண்டு அடங்கலாக மூன்று பாடங்களில் க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

அத்துடன்

வெளிசர/ அநுராதபுரம்/ குண்டசாலை கால்நடை வளர்ப்பு பாடசாலையில் வழங்கப்படுகின்ற இரு வருட டிப்ளோமாச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

7. **ஆட்சேர்ப்பு முறைமை**.- ஆரம்பத் தகைமைகளைப் பெற்றிருக்கும் விண்ணப்பக்காரர் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தி னூடாக நடாத்தப்படுகின்ற பொதுப் போட்டிப் பரீட்சையில் அமர்தல் வேண்டும்.

(i) பொதுப் போட்டிப் பரீட்சைக்குரிய அனைத்து வினாப்பத் திரத்திலும் 50% புள்ளிகளை அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப்

பெற்றுக்கொள்கின்ற விண்ணப்பக்காரர் நேர்முகப் பரீட்சைக்கு திறமை அடிப்படையில் அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சைக்காக எவ்வித புள்ளிகளும் வழங்கப்படமாட்டாது. தகைமைகளை உறுதி செய்து கொண்டு விண்ணப்பகாரர் பரீட்சையின்போது பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் திறமை ஒழுங்கில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

***பரீட்சை :***

(i) இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படும்.

(ii) விண்ணப்பக்காரர் தான் விரும்பும் மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றலாம்.

(iii) பரீட்சையின்போது மொழி மூலத்தினை எக்காரணம் கொண்டும் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

(iv) பரீட்சைக் கட்டணம்.- விண்ணப்பக்காரர் பரீட்சைக் கட்டணமாக 300 ரூபாவினை பேராதனையில் அமைந்துள்ள தபால் கந்தோரில் மாற்றத்தக்கவாறு எந்தவொரு தபால் பணிமனையிலும் செலுத்தி "கால்நடை உற்பத்தி, சுகாதார பணிப்பாளர் நாயகம்" எனும் பெயரில் காசுக்கட்டளை ஒன்று பெற்று விண்ணப்பத்தில் உரிய இடத்தில் ஒட்டி அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

(v) பரீட்சைப் பாடங்கள்.- பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டது.

(அ) விவேகம்
(ஆ) தொழில்நுட்பவியல்

(vi) பாடத்திட்டம் :

(அ) விவேகப் பரீட்சை (நேரம் : 1 மணித்தியாலம்) - மொத்தப் புள்ளிகள் 100.
இதில் விண்ணப்பக்காரர் தர்க்கரீதியாக சிந்திக்கும் ஆற்றல் அவரது சிந்தனையின் பகுப்பாய்வு அம்சங்கள், தீர்மானம் எடுக்கும் திறன், சீர்தூக்கிப் பார்க்கும் வல்லமை என்பன அடங்கலான வினாக்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

(ஆ) தொழில்நுட்பவியல் (நேரம் : 1 மணித்தியாலம்) - மொத்தப் புள்ளிகள் 100.
இவ்வினாப்பத்திரத்தில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டிக்கும் -

(i) இலங்கையில் விவசாயமற்றும் கால்நடை வளத் துறைக்கு கிடைக்கப்பெறும் வளங்கள் அதன் சிறப்பம்சங்கள் தற்போதைய நிலைமை மற்றும் பொருளாதார நடவடிக்கை.
(ii) இலங்கையில் நோய் பரவாமல் தனிமைப் படுத்தி வைத்திருக்கும் காலத்தில் விலங்கு உற்பத்தி, சந்தை முறைமைகளின் பாங்கு, கால்நடை வளர்ப்பின் பாங்கு, அவற்றின் இடஅமைவு மற்றும் பரம்பல்.
(iii) பண்ணை விலங்குகளின் இனப்பெருக்கல் முறைமை.
(iv) தொற்றும் விலங்கு நோய்கள், விலங்கு நோய்களின் கட்டுப்பாடு, நோயுள்ள விலங்குகளினை சேகரித்துக்கொண்டு செல்லுதல்.
(v) ஒன்றிணைந்த பண்ணை முறைமையின் மீள் பயன்பாட்டு முறைமைகள்.
(vi) கால்நடை வளர்ப்பு செயன்முறையுடன் தொடர்புற்ற வருமான செலவினங்களைக் கணிக்கும் ஒழுங்கு முறை, கணக்குப் பகுப்பாய்வு, விலங்குப் பண்ணைத்திட்டம்.
(vii) விஞ்ஞான தகவல்களை பரப்புதல் அவற்றின் ஆக்கத்திறன் தொடர்புற்ற முறைமைகளின் பிரயோகம்.

9. **விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படும் முறை.**- (i) இவ்வறிவித்தலுக்கு அமைவாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய 8 1/2" x 12" அளவிலான A4 கடதாசியில் இரு பக்கங்களினையும் பிரயோகித்து தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2008.04.10 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கத்தக்கவாறு "பணிப்பாளர் நாயகம், கால்நடை உற்பத்தி, சுகாதாரத் திணைக்களம், த. பெ. இலக்கம் 13, கெடம்பே, பேராதனை" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பத்தை உள்ளிட்டு அனுப்பும் கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் "கால்நடை வள அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கான போட்டிப் பரீட்சை" எனும் வாசகம் தெளிவாக எழுதப்படுதல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

குறிப்பு.- அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பக்காரர் தமது விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவரினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(ii) சகல தேவைப்பாடுகளையும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலிலிடுகையின்போது விண்ணப்பங்கள் காணாமல் போதல் அல்லது தாமதமாகி விடுதல் போன்ற எவ்வித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(iii) விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பக்காரருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் பரீட்சை ஆரம்பிப்பதற்கு 4 நாட்களுக்கு முன்னர் கிடைக்கப்பெறாதவிடத்து பின்வரும் விபரங்களுடன் உடனடியாக கால்நடை உற்பத்தி சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்துடன் தொடர்பு கொள்க :-

(அ) விண்ணப்பகாரரது முழுப்பெயர்
(ஆ) முகவரி
(இ) விண்ணப்பம் தபாலிலிட்ட திகதி, பதிவு இலக்கம், தபாற் பணிமனை.

10. விண்ணப்பக்காரர் பின்வரும் ஆவணங்களில் ஒளிப்படப் பிரதியினை (photo copy) விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும் :-

(அ) பிறப்புச் சான்றிதழ்
(ஆ) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.

**விண்ணப்பக்காரரது ஆளடையாளம்.**- பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பக்காரர் யாவரும் பரீட்சை நிலையத்தில் தமது ஆளடையாளத்தினை பரீட்சை நிலைய பொறுப்பதிகாரி திருப்தியுறும்

வகையில் உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன்பொருட்டு பின்வருவன ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை

(ஆ) ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய கடவுச்சீட்டு (பரீட்சை தினத்திற்கு 3 வருடத்திற்கு முன்னர் வழங்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்)

**பிழையான தகவல்களை வழங்குதல்.-** இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பக்காரர் உரிய தகைமைகளைக் கொண்டிராமை கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சைக்கு முன்னர், பரீட்சையின்போது அல்லது பரீட்சையின் பின்னர் எச்சந்தர்ப்பத்திலாயினும் அவருடைய விண்ணப்ப தகைமை இரத்துச் செய்யப்பட இடமுண்டு. விண்ணப்பகாரரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் ஏதாவது பிழையானது என தெரிந்திருந்தும் சமர்ப்பித்து இருப்பாராயின் அவர் சேவையினின்றும் நிறுத்தப்படுவதற்கு இடமுண்டு.

இவ்வர்த்தமானி பத்திரிகையில் பகுதி I : தொகுதி (II அ) வின் ஆரம்பத்தில் காட்டப்பட்டுள்ள அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடையதாகும் பொது நிபந்தனை மற்றும் பரீட்சார்த்திகளுக்கான விதிகள், அறிவுறுத்தல்கள் பால் உங்கள் கவனத்தை ஈர்ப்பதுடன் அவற்றினை பின்பற்றவும்.

11. இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதாவது விடயம் தொடர்பில் பிரச்சினைகள் ஏற்படுமாயின் அது தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் கால்நடை உற்பத்தி சுகாதார சேவை பணிப்பாளர் நாயகத்திற்கே உரியதாகும். அதுவே இறுதித் தீர்வாகும். (கால்நடை வள அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை தொடர்பிலான முழுமையான விபரம் 2005.09.14 ஆந் திகதி வெளியிடப்பட்ட 1410/23 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் இலங்கை கால்நடை வள அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை பிரமாணக் குறிப்பில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

எச். எம். எஸ். பி. ஹேரத்,
கால்நடை உற்பத்தி, சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம்.

கால்நடை உற்பத்தி, சுகாதார சேவைத் திணைக்களம்,
பேராதனை,
2008.02.05.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கால்நடைவள அபிவிருத்தி அமைச்சு**
**கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்**

இலங்கை கால்நடை வள அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் II ஆம் வகுப்பு "ஆ" தரத்திற்கு கால்நடைவள அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் தொடர்பான விண்ணப்பம் - 2008

[ ]
அலுவலக உபயோகத்திற்கு

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
(உரிய இலக்கத்தை அடைப்பில் எழுதுக)

சிங்களம் - 02
தமிழ் - 03
ஆங்கிலம் - 04
[ ]

1. பெயர் :-
1.1 முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) :-----.
(உதாரணம் SILVA, B.A.)
1.2 முழுப் பெயர் (தமிழில்) :-----.
1.3 தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2. முகவரி :-
2.1 தனிப்பட்ட :-----.
2.2 அலுவலக :-----.
2.3 தபால் முகவரி :-----.

3. 3.1 பால் (உரிய அடைப்பில் '✓' அடையாளம் இடுக) :-

ஆண் [ ]
பெண் [ ]

3.2 பிறந்த திகதி :-

ஆண்டு [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]

3.3 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதியன்று வயது :-

வருடங்கள் [ | ] மாதங்கள் [ | ] நாட்கள் [ | ]

3.4 குடியியல் நிலை (உரிய அடைப்பில் '✓' அடையாளம் இடுக) :-----.

விவாகமானவர் : [ ]
விவாகமாகாதவர் : [ ]

4. கல்வித் தகைமைகள் :-----.

4.1 க. பொ. த. (உயர்தரப்) பரீட்சை :-

வருடம் :-----. மாதம் :-----.

| விடயம் | பெற்ற தரம் | சுட்டெண் |
|---|---|---|
| | | |

4.2 (அ) கால்நடை வளர்ப்பு டிப்ளோமா பெறப்பட்ட நிறுவகம் :-----.
(ஆ) கால்நடை வளர்ப்பு டிப்ளோமா பெற்ற திகதி :-----.

5. தற்போதைய தொழில் மற்றும் முன்னைய நியமனங்கள் (இருப்பின்) மாத்திரம் :-----.

| பதவி | நிறுவனம் | முதல் | வரை |
|---|---|---|---|
| | | | |

6. பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபால் பணிமனையின் பெயர் : -----.

காசுக்கட்டளை இலக்கம் :-----.

பரீட்சைக் கட்டணமாக 300 ரூபாவினை தீவின் எந்தவொரு தபால் பணிமனையிலும் 'கால்நடை உற்பத்தி, சுகாதார பணிப்பாளர் நாயகம்' எனும் பெயரில் செலுத்தவும்.
மாற்றக்கூடிய பணிமனை – பேராதனை

பற்றுச்சீட்டினை இங்கு ஒட்டவும்.

7. இவ்விண்ணப்பத்தில் என்னால் முன்கைக்கப்பட்ட விடயங்கள் உண்மையானதும் சரியானதும் என்பதை உறுதியுரைக்கின்றேன். இங்கு தரப்பட்டுள்ள விபரங்களில் ஏதாவது உண்மையற்றது அல்லது பிழையானதுஎன நான் தெரிவு செய்வதற்கு முன் அறியப்படுமிடத்து நான் தகைமையற்றவனாகுவதுடன், தெரிவு செய்த பின்னர் அவ்வாறு தெரியப்படுமிடத்து எத்தகைய நட்டஈடும் வழங்கப்படாது சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

-----,
விண்ணப்பகாரரது கையொப்பம்.

திகதி :-----.

(தற்போது அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு மாத்திரம்)

**திணைக்களத் தலைவரினது சான்றிதழ்**

உத்தியோகத்தரால் மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் பரீட்சிக்கப்பட்டது எனவும் அவை சரியானது எனவும் இவ்வுத்தியோகத்தர் மேற்குறிப்பிடப்பட்ட பதவியின் பொருட்டு தெரிவு செய்யப்படுமிடத்து அவர் தற்போது வகிக்கும் பதவியில் இருந்து விடுவிப்புச் செய்ய முடியும்/ முடியாது எனவும் சான்றுபடுத்துகின்றேன்.

-----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
(அலுவலக முத்திரை)

பதவிப் பெயர் :-----.
முகவரி :-----.
திகதி :-----.

3-298

**நொத்தாரிசு இறுதிப் பரீட்சை-2007, செத்தெம்பர்**

கீழ்வரும் பரீட்சார்த்திகள் அவர்களது பெயர்களுக்கெதிரே குறிப்பிடப்பட்ட மொழியில் நொத்தாரிசுமார்களுக்கான நொத்தாரிசு இறுதிப் பரீட்சையில் சித்தியெய்தியுள்ளார்கள் என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

| | பெயர் | மொழிமூலம் |
|---|---|---|
| 1. | திரு. எஸ். எம். தாவித் சிங்ஞோ | சிங்களம் |
| 2. | திரு. ஏ. என். சந்ராதித்ய | சிங்களம் |
| 3. | திரு. எச். எம். எச். டி ஹேரத் | சிங்களம் |
| 4. | திரு. எல். டபிள்யூ. எஸ் தயாரத்ன | சிங்களம் |
| 5. | திரு. எச். பி. விஜயனந்த | சிங்களம் |
| 6. | திரு. டபிள்யூ. எம். ரூபசிங்க | சிங்களம் |
| 7. | திருமதி பி. எம். ஓலுனி கூரே | சிங்களம் |
| 8. | திரு. ஐ. பி. விமலவன்ஷசூரிய | சிங்களம் |
| 9. | திரு. சி. கே. கமகே | சிங்களம் |
| 10. | திருமதி ஜி. கே. கமகே | சிங்களம் |
| 11. | திரு. எச். எல். எம். ஜவ்பர் | தமிழ் |
| 12. | செல்வி ஏ. எஸ். ஐயர் | தமிழ் |
| 13. | திரு. ஜே. டி. சி. ஜே. எஸ். நாணயக்கார | சிங்களம் |
| 14. | திருமதி டி. எம். பி. சுஜாதா | சிங்களம் |
| 15. | திரு. வை. ஜி. சேனவிரத்ன | சிங்களம் |
| 16. | திருமதி ஈ. எம். ஏ. கே. குமாரதுங்க | சிங்களம் |
| 17. | திரு. ஏ. எம். குணசேன | சிங்களம் |
| 18. | திரு. டி. ஏ. எல். டபிள்யூ. ரணசிங்க | சிங்களம் |
| 19. | திருமதி எல். ஏ. வன்ஷாவதி | சிங்களம் |
| 20. | திருமதி எஸ். பி. டி. எச். கே. பத்திரன | சிங்களம் |
| 21. | திரு. ஏ. எம். ரி. அபேக்கோன் | சிங்களம் |
| 22. | திரு. ஏ. சி. எம். பலீல் | தமிழ் |
| 23. | திரு. கே. ஆர். ஜயதிலக | சிங்களம் |
| 24. | திரு. எம். உதயகுமாரன் | தமிழ் |
| 25. | திரு. கே. தியாகராஜா | தமிழ் |
| 26. | திரு. வி. சிவசுப்பிரமணியம் | தமிழ் |
| 27. | திரு. டி. நிஸங்க | சிங்களம் |
| 28. | திரு. டி. எஸ். சிறியசிங்க | சிங்களம் |
| 29. | திரு. எச். ஜே. தயாரத்ன | சிங்களம் |
| 30. | திருமதி எச். எல். ஏ. டி. பி. டி. செனவிரத்ன | சிங்களம் |
| 31. | திரு. எச். ரி. தயானந்த | சிங்களம் |
| 32. | திரு. கே. திருச்செல்வம் | தமிழ் |
| 33. | திருமதி எச். எம். எச். எச். விக்ரமசிங்க | சிங்களம் |
| 34. | திருமதி எச். டி. எச். எல். கருணாரத்ன | சிங்களம் |
| 35. | திருமதி ஏ. கே. டி. அல்விஸ் | சிங்களம் |

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
கொழும்பு 11,
2008, பெப்புருவரி 27.

3-402

## விவசாய அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சு

விவசாயத் திணைக்களம்

### விவசாயத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையில் III ஆந் தர விவசாயப் போதனாசிரியர், ஆராய்ச்சி உதவியாளர், பண்ணை இயந்திர போதனாசிரியர், பொறியியல் உதவியாளர், பொறியியல் முகாமி, தொழில்நுட்ப அலுவலர், கட்டிட ஓவர்சியர்/வேலை மேற்பார்வையாளர் பதவிகளுக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2008

விவசாயத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையில் மேற்கூறிய பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரிகள் 18 வயதுக்குக் குறையாலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரச சேவையில், மாகாண அரச சேவையில் பணியாற்றுபவர்களுக்கு இவ் உச்ச வயதெல்லை ஏற்புடையதாகமாட்டாது.

3. இப்பதவிகளுக்கு பொது நிர்வாக சுற்று நிருபம் 06/2006 (iv) இன் பிரகாரம் மாத சம்பள அளவுத்திட்டம் ரூபா 14,570 – 170 x 10 – 180 x 11 – 240 x 16 – 320 x 14 - ரூபா 24,170 ஆகும்.

4. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். விதவை/அநாதை/தபுதாரர் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்பு செலுத்துதல் வேண்டும்.

5. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் விண்ணப்பதாரிகள் கீழ்வரும் அடிப்படைக் கல்வித் தகைமைகளையும் தொழிற் தகைமைகளையும் பெற்றிருத்தல் அவசியமாகும் :-

| பதவி | கல்வித் தகைமைகள் | | தொழிற் தகைமைகள் |
|---|---|---|---|
| | க. பொ. த. (சா. த.) | க. பொ. த. (உ. த.) | |
| விவசாயப் போதனாசிரியர் மற்றும் ஆராய்ச்சி உதவியாளர் | மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் அத்துடன் இன்னுமோர் பாடத்திலும் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்திபெற்றிருத்தல். | விலங்கியல், இரசாயனவியல், தாவரவியல், விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் ஏதாவது இரண்டு பாடங்கள் அடங்கலாக மொத்தம் (03) விஞ்ஞானப் பாடங்களில் க. பொ. த. (உ. த.) பழைய பாடத்திட்டத்தின் படி ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல். | குண்டசாலை, அங்குணகொல பெலஸ்ஸ, பெல்வெஹர, பிபிலை, லபுதுவ, வாரிய பொல, வவுனியா, அநுராத புரம், கரபிங்க ஆகிய விவசாயக் கல்லூரிகளிலொன்றில் விவசாயத்திலான இரு வருட டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல். |
| | | அல்லது | அல்லது |
| | | உயிரியல், இரசாயனவியல் ஆகிய இரண்டு விஞ்ஞானப் பாடங்களுடன் மொத்தம் மூன்று (03) விஞ்ஞானப் பாடங்களில் க. பொ. த. (உ. த.) புதிய பாடத்திட்டத்தின் படி ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல். | ஹாடி தொழில்நுட்பவியல் நிறுவனத்தால் வழங்கப்படும் விவசாயத்திலான டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் |
| | | | அல்லது |
| | | | அக்வைனாஸ் நிறுவனத்தில் வழங்கப்படும் விவசாயத்திலான டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல். |
| | | | அல்லது |
| | | | அரச அங்கீகாரம்பெற்ற நிறுவனமொன்றால் வழங்கப்படும் இரு வருட விவசாயத்திலான டிப்ளோமாச் சான்றிதழ் பெற்றிருத்தல் |

| பதவி | கல்வித் தகைமைகள் | | தொழிற் தகைமைகள் |
|---|---|---|---|
| | க. பொ. த. (சா. த.) | க. பொ. த. (உ. த.) | |
| விவசாயப் போதனாசிரியர்<br>மற்றும்<br>ஆராய்ச்சி உதவியாளர்<br>- (தொடர்ச்சி) | | | அல்லது<br><br>மேற்கூறிய தகைமைகளுக்கு சமமானதென இலங்கை தொழில்நுட்பவியல் சேவைகள் சபையால் ஏற்றுக்கொள்ளப்படும் வேறு தகைமைகளைப் பெற்றிருத்தல். |
| பண்ணை இயந்திர போதனாசிரியர்<br><br>பொறியியல் உதவியாளர்<br><br>பொறியியல் முகாரி<br><br>தொழில்நுட்ப அலுவலர் | மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் அத்துடன் இன்னுமோர் பாடத்திலும் திறமைச் சித்தியுடன் இரு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தி. | பிரயோக கணிதம், தூய கணிதம், பௌதீகவியல், இரசாயனவியல் ஆகிய விஞ்ஞானப் பாடங்களில் ஏதாவது இரண்டு பாடங்கள் அடங்கலாக மொத்தம் (03) விஞ்ஞானப் பாடங்களில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பழைய பாடத்திட்டத்தில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.<br><br>அல்லது<br><br>இணைந்த கணிதம், பௌதீகவியல், இரசாயனவியல் ஆகிய விஞ்ஞானப் பாடங்களில் ஏதாவது இரண்டு பாடங்கள் அடங்கலாக மொத்தம் மூன்று (03) விஞ்ஞானப் பாடங்களில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் புதிய பாடத்திட்டத்தில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல். | (1) மொரட்டுவை பல்கலைக் கழகத்தில் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தில் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா ;<br><br>அல்லது<br><br>(2) தேசிய பயிலுனர் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபையால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா ;<br><br>அல்லது<br><br>(3) கல்வி, உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் உயர் தேசிய பொறியியல் டிப் ளோமா ;<br><br>அல்லது<br><br>(4) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா ;<br><br>அல்லது<br><br>(5) இலங்கை பொறியியல் நிறுவனத்தால் நடாத்தப்படும் பொறியியல் பரீட்சையில் I ஆம் பகுதியை வெற்றிகரமாக பூரணப்படுத்தியிருத்தல் ;<br><br>அல்லது<br><br>(6) உயர் கல்வி அமைச்சைச் சேர்ந்த மேற்கூறிய சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களை தொடர்பு கொண்டு கருத் துக்கள் பெற்ற பின் மேற்கூறிய தொழிநுட்ப தகைமை |

| பதவி | கல்வித் தகைமைகள் | | தொழிற் தகைமைகள் |
|---|---|---|---|
| | க. பொ. த. (சா. த.) | க. பொ. த. (உ. த.) | |
| பண்ணை இயந்திர போதனாசிரியர்<br>பொறியியல் உதவியாளர்<br>பொறியியல் முகாரி<br>தொழில்நுட்ப அலுவலர் | | | களுக்கு எல்லா வகையிலும் சமமான தென இலங்கை தொழில் நுட்ப சேவைகள் சபை யால் ஏற்றுக்கொள்ளப் படும் வேறு தொழில் நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல். |
| கட்டிட ஓவர்சியர்/ வேலை மேற்பார்வையாளர் | மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் அத்துடன் இன்னுமோர் பாடத்திலும் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் இரு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் க.பொ.த.(சா.த.) பரீட்சையில் சித்திபெற்றி ருத்தல். | பிரயோக கணிதம், தூய கணிதம், பௌதீகவியல், இரசாயனவியல் ஆகிய விஞ்ஞான பாடங்களில் ஏதாவது இரண்டு (02) பாடங்கள் அடங்கலாக மொத்தம் மூன்று விஞ்ஞான பாடங்களில் க. பொ. த. (உ. த.) பழைய பாடத்திட்டத் தின்படி ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் அல்லது இணைந்த கணிதம், பௌதீகவியல், இரசாயனவியல் ஆகிய விஞ்ஞானப் பாடங்களில் ஏதாவது இரண்டு (02) பாடங்கள் அடங்கலாக மொத்தம் மூன்று (03) விஞ்ஞானப் பாடங்களில் க. பொ. த. புதிய பாடத்திட்டத்தின்படி ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல். | (1) மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தில் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா ;<br>அல்லது<br>(2) தேசிய பயிலுனர் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபையால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா ;<br>அல்லது<br>(3) கல்வி, உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா ;<br>அல்லது<br>(4) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் தொழில் நுட்ப டிப்ளோமா ;<br>அல்லது<br>(5) இலங்கை பொறியியல் நிறுவனத்தால் நடாத்தப்படும் பொறியியல் பரீட்சையில் I ஆம் பகுதியை வெற்றிகரமாக பூரணப்படுத்தியிருத்தல் ;<br>அல்லது<br>(6) உயர் கல்வி அமைச்சைச் சேர்ந்த மேற்கூறிய சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களை தொடர்புகொண்டு கருத்துக்களைப் பெற்ற பின் |

| *பதவி* | *கல்வித் தகைமைகள்* | | *தொழிற் தகைமைகள்* |
|---|---|---|---|
| | *க. பொ. த. (சா. த.)* | *க. பொ. த. (உ. த.)* | |
| கட்டிட ஓவர்சியர்/ வேலை மேற்பார்வையாளர் - *(தொடர்ச்சி)* | | | மேற்கூறிய தொழிநுட்ப தகைமைகளுக்கு எல்லா வகையிலும் சமமான தென இலங்கை தொழில் நுட்ப சேவைகள் சபை யால் ஏற்றுக்கொள்ளப் படும் வேறு தொழில் நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல். |

6. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) இப்பரீட்சைக்கான மாதிரி விண்ணப்பப்படிவமொன்று இவ் அறிவித்தலின் இறுதியில் வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் விண்ணப்பத்தை A4 (21cmx29cm) அளவுடைய தாளொன்றை உபயோகித்து தயாரித்தல் வேண்டும். (விண்ணப்பித்தல் 1 முதல் 4 வரையான பந்திகள் கட்டாயமாக முன் பக்கத்தில் அடங்குதல் வேண்டும்)

(ஆ) பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலேயே விண்ணப்பப்படிவங்கள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

(இ) முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2008.04.15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

(உ) ஒரு பதவிக்கான பரீட்சைக் கட்டணம் ரூபா 250 ஆகும். குறித்த பரீட்சை கட்டணத்தை நாட்டின் எந்தவொரு தபாலகத்திலேனும் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் உரிய இடத்தில் ஒட்டுதல் வேண்டும். அப்பற்றுச்சீட்டின் நிழற் பிரதியொன்றை தம் வசம் வைத்திருத்தல் விரும்பத்தக்கது.

(ஊ) 2006.12.15 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட பண்ணை இயந்திரப் போதனாசிரியர், பொறியியல் உதவியாளர், ஆராய்ச்சி உதவியாளர் ஆகிய பதவிகளுக்கும் 2007.02.09 ஆந் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டிட ஓவர்சியர்/வேலை மேற்பார்வையாளர் பதவிகளுக்கும் விண்ணப்பித்தவர்கள் இவ் அறிவித்தலின்படி மீண்டும் விண்ணப்பித்தல் வேண்டும். இப்பதவிகளுக்காக மீண்டும் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. விண்ணப்பத்தில் உரிய இடத்தில் முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இலக்கம், திகதி, செலுத்திய தபால் அலுவலகம் என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும்.

(எ) முறையாகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்களும் தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவமொன்று தபாலில் காணாமல் போனமை அல்லது தாமதமாகக் கிடைத்தமை தொடர்பாக திணைக்களம் பொறுப்புக் கூற மாட்டாது.

(ஏ) விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பம் அரச பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சட்டத்தரணி அல்லது அரச சேவையில் பதவிநிலை அலுவலர் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

(ஐ) ஏற்கனவே அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களைத் தமது திணைக்களத் தலைவரினூடாக சமர்ப்பிக்க வேண்டும்.

7. **பரீட்சைக்குத் தோற்றுதல்**.- (அ) அனுமதி அட்டை.- விண்ணப்பப்படிவங்களை அனுப்பிய சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டைகளை வழங்குவார். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி தமது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டைகளை பரீட்சை மேற்பார்வையாளர்களுக்குச் சமர்ப்பிக்க வேண்டும். அனுமதி அட்டையை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்.

(ஆ) இப்பரீட்சை மே மாதமளவில் நடாத்தப்படும் பரீட்சை திகதிக்கு குறைந்தபட்சம் ஏழு நாட்களுக்கு முன்னரேனும் தமது அனுமதி அட்டையை பெறாத விண்ணப்பதாரியொருவர் கீழ்வரும் விபரங்களுடன் உடனே பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்துடன் தொடர்பு கொள்ளுதல் வேண்டும் :-

(i) பரீட்சையின் பெயர் ;
(ii) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் ;
(iii) முகவரி ;
(iv) விண்ணப்பத்தினை தபாலிட்ட திகதியும் பதிவு இலக்கமும் தபால் நிலையமும் ;
(v) பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் தபால் நிலையமும்.

(இ) இப்பரீட்சைக்குத் தோற்றுதவதற்காக விண்ணப்பதாரிகளுக்கு எவ்வித பிரயாணச் செலவுகளோ வேறு கொடுப்பனவுகளோ வழங்கப்படமாட்டாது.

(ஈ) தாம் பரீட்சைக்குத் தோற்றும் சகல பாடங்கள் தொடர்பாகவும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சை நிலைய பொறுப்பதிகாரி திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தினை நிரூபித்தல் வேண்டும். இதற்காக கீழ்வரும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

(உ) பாடப்பரப்பு :

(i) விவேகப் பரீட்சை (100 புள்ளிகள் – 1 மணித்தியால வினாத்தாள்) பரீட்சார்த்தியின் தர்க்கரீதியாக சிந்திக்கும் ஆற்றல், பகுப்பாய்வுத் திறன், தீர்மானமெடுக்கும் ஆற்றல் என்பவற்றை மதிப்பிடுவதற்கான துறைசார் வினாக்களைக் கொண்டது.

(ii) தொழில்நுட்பவியல்சார் வினாத்தாள் (100 புள்ளிகள் – 2 மணித்தியாலம் வினாத்தாள்) :
பகுதி 01 – துறைசார் வினாப்பத்திரம் – காலம் 1 மணித்தியாலம்
பகுதி 02 – கட்டமைக்கப்பட்ட கட்டுரைகள் கொண்ட வினாத்தாள் – காலம் 1 மணித்தியாலம்

| பதவி | தொழில்நுட்ப வினாத்தாளுக்குரிய பாடப்பரப்பு |
|---|---|
| விவசாய போதனாசிரியர்<br>ஆராய்ச்சி உதவியாளர் | இலங்கை பொருளாதார அபிவிருத்தியில் விவசாயத்தின் பங்களிப்பு/இலங்கை காலநிலை வலயங்கள் பற்றிய அறிவு/மண், பயிர் போஷணை/நெல் உற்பத்தி/ஏனைய வயற் பயிர்கள், உற்பத்தி/காய்கறி உற்பத்தி/பழ உற்பத்தி/பயிர் பாதுகாப்பு/மண் பாதுகாப்பின் முக்கியத்துவமும் பல்வேறு மண் பாதுகாப்பு முறைகளும்/நீர்ப்பாசன முறைகளும் நீர் முகாமையும்/பண்ணை இயந்திர மயமாக்கல்/தேனீ வளர்ப்பு/மலர் வளர்ப்பும் தரை அலங்காரப்படுத்தலும்/பாதுகாக்கப்பட்ட பயிர் செய்கைகள்/கால்நடை வளர்ப்பு/விவசாய விரிவாக்கம் போன்ற துறைகளில் அறிவை மதிப்பிடுவதற்கான வினாத்தாள். |
| பண்ணை இயந்திர போதனாசிரியர்<br>பொறியியல் உதவியாளர்<br>பொறியியல் முகாரி | ஒட்டுவேலை, கொல்ல வேலை, தச்சு வேலை, வேலைத்தள இயந்திரங்கள், தகடு வேலை, வெட்டும் அலகு (Cutting blade) உபகரணங்கள், பொருட்களின் பண்புகளும் எளிய கணிப்பீடுகளும், மோட்டார் இயந்திரவியல் மின்சாரப் பொறியியல் போன்ற துறைகளில் கோட்பாட்டு ரீதியானதும் செயன்முறை ரீதியானதுமான அறிவை பரீட்சிப்பதற்கான வினாத்தாள். |
| தொழில்நுட்ப அலுவலர் | பல்வேறு ஒட்டு வேலைகளும் அவற்றுக்குப் பயன்படுத்தும் உபகரணங்களும் கருவிகளும், உபகரணங்களை தக அமைத்தல், ஒட்டு வேலைக்காக பகுதிகளை ஒழுங்கமைத்தல்.<br><br>கொல்ல வேலைகளின்போது பயன்படுத்தும் உபகரணங்கள் உலோக வகைகளை இனங்காணல், பல்வித வடிவங்களை ஒழுங்கமைத்தல், வேலைத்தளமொன்றிலுள்ள பல்வித இயந்திரங்களை இனங்காணல், அவற்றின் சீரான செயற்பாடும் பராமரிப்பும்.<br><br>பல்வேறு பொருட்களை இனங்காணல், பொருட்கள் மீது விசையின் தொழிற்பாடு, கன பரிமாணம், விசை, திருப்பம், வேலை, வேலைத்தளமொன்றில் காணப்பட வேண்டிய பாதுகாப்பு முறைகள். |
| கட்டிட ஓவர்சியர்/வேலை மேற்பார்வையாளர் | அளவையும் மட்டம் எடுத்தலும், கட்டிடப் பொருட்கள், கட்டிட நிர்மாணமும் மதிப்பீட்டறிக்கை தயாரித்தலும் வலைவுக் கட்டமைப்பு, கொய்வு விசை வரைபடம்.<br>சேவைகள் : மின்சாரம், நீர், சுகாதார வசதிகள் போன்ற துறைகளில் பரீட்சார்த்தியின் அறிவை மதிப்பிடுவதற்கான வினாத்தாள். |

(ஊ) இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரி தாம் தோற்றும் சகல வினாத்தாள்களுக்கும் ஒரே மொழி மூலத்தில் விடையளிக்க வேண்டும்.

(எ) ஆராய்ச்சி உதவியாளர், பொறியியல், உதவியாளர், பொறியியல் முகாரி, தொழில்நுட்ப அலுவலர், பண்ணை இயந்திர போதனாசிரியர், கட்டிட ஓவர்சியர்/வேலை மேற்பார்வையாளர் ஆகிய பதவிகளுக்கான போட்டிப் பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும்.

(ஏ) விவசாய போதனாசிரியர் பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சை கீழ்வரும் பரீட்சை நிலையங்களில் நடாததப் படும் :-

| பரீட்சை நிலையம் | குறியீட்டு எண் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| காலி | 03 |
| திருகோணமலை | 04 |
| குருநாகல் | 05 |
| அநுராதபுரம் | 06 |
| பதுளை | 07 |
| இரத்தினபுரி | 08 |

(ஐ) குறித்த பரீட்சை நிலையமொன்றுக்கு போதியளவான விண்ணப்பதாரிகள் காணப்படாதவிடத்து அப்பரீட்சை நிலையம் இரத்துச் செய்யடக்கூடுமென்பதால் தமது விருப்பு தெரிவின் பிரகாரம் மூன்று (03) பரீட்சை நிலையங்களைக் குறிப்பிடுதல் வேண்டும்.

குறிப்பு.- ஒவ்வொரு வினாத்தாளிலும் 40% அல்லது அதற்கதிகமான புள்ளிகளைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகளைத் தெரிவு செய்து பெற்றுள்ள புள்ளிகளின் கூட்டுத் தொகைக்கேற்ப தயாரிக்கப்படும் முன்னுரிமைப் பட்டியலொன்றின் அடிப்படையில் ஆட்சேர்த்துக்கொள்ளப்படும்.

8. **சேவையில் அமர்த்தும் நியதிகள்**.- (i) தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் தீவின் எப்பகுதியிலும் சேவையாற்ற தயாராயிருத்தல் வேண்டும் ;

(ii) நாடு முழுவதிலும் காணப்படும் விவசாய போதனாசிரியர் பதவிக்கான வெற்றிடங்களை இப்பரீட்சையின் பெறுபேறுகளினடிப்படையில் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

கீழ்வரும் மாவட்டங்களிலும் பிரதேசச் செயலாளர் பிரிவுகளிலும் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு முன்னுரிமையளிக்கப்படும். வெற்றிடங்கள் காணப்படும் மாவட்டங்களும் பிரதேச செயலாளர் பிரிவுகளும் :-

| | |
|---|---|
| கண்டி (மினிபே பிரதேச செயலாளர் பிரிவு) | 01 |
| பொலன்னறுவை | 02 |
| அநுராதபுரம் | 03 |
| அம்பாந்தோட்டை (வீரவில பி.செ.பி.) | 04 |
| மொனராகலை | 05 |
| நுவரெலியா | 06 |
| வவுனியா | 07 |
| கிளிநொச்சி | 08 |
| அம்பாறை | 09 |
| மாத்தறை (வில்கமுவ பிரதேச செயலாளர் பிரிவு) | 10 |
| பதுள்ளை (கன்தகெடிய/ மஹியங்கனை-ரிதிமாலயத்த (பி.செ.பி) | 11 |
| திருகோணமலை (கந்தளாய் பி.செ.பி.) | 12 |
| மன்னார் (முருங்கன்/ நானாட்டான் பி.செ.பி) | 13 |
| மொனராகலை (முத்துக் கண்டிய பி.செ.பி.) | 14 |

(iii) மேற்கூறிய சேவை நிலையங்களும் உட்பட தாம் சேவையாற்ற விரும்பும் ஐந்து (05) சேவை நிலையங்களை தமது விருப்பத் தெரிவினடிப்படையில் விண்ணப்பத்தில் 7 ஆம் பந்தியில் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். நியமனம் வழங்கப்படும் போது விண்ணப்பதாரியின் விருப்பத் தெரிவின்படி குறித்த சேவை நிலையங்களை வழங்குவது தொடர்பாக கவனத்திலெடுக்கப்படும்.

9. ஆட்சேர்ப்பு முறை.- ஏழாம் (07) பந்தியில் குறிப்பிடப்பட்ட பரீட்சைக்குத் தோற்றி அதில் உயர்புள்ளிகள்பெற்று தகைமை பெறும் விண்ணப்பதாரிகள் காணப்படும் வெற்றிட எண்ணிக்கைக்கு ஏற்ப 1:5 எனும் விகிதத்தில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையில் உயர் புள்ளிகளைப் பெற்று தகமை பெறும் பரீட்சார்த்திகள் ஆட்சேர்ப்புக்குத் தெரிவு செய்யப்படுவர்.

10. இங்கு குறிப்பிடப்படாத வேறேதும் விடயங்கள் இருப்பின் அது தொடர்பாக நியமன அதிகாரி இறுதி முடிவெடுப்பார். சகல விண்ணப்பதாரிகளும் இவ் வர்த்தமானியில் கூறப்பட்ட பொதுவான பரீட்சை விதிமுறைகளுக்கேற்ப செயலாற்றுவதற்கு கடமைப்பட்டுள்ளனர்.

11. வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட தகைமைகள் பெற்றிருப்பவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் எனக் கருதி, உரிய பரீட்சைக் கட்டணங்களை செலுத்தி குறித்த திகதியில் அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்துள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்படும்.

**கவனத்திற்கு**.- 2006.12.15 மற்றும் 2007.02.09 ஆந் திகதி கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட விளம்பரங்களின் பிரகாரம் பொறியியல் உதவியாளர், ஆராய்ச்சி உதவியாளர், பண்ணை இயந்திரப் போதனாசிரியர், கட்டிட ஓவர்சியர்/வேலை மேற்பார்வையாளர் ஆகிய பதவிகளுக்கு விண்ணித்தவர்கள் இவ் அறிவித்தலின் பிரகாரம் குறித்த பதவிகளுக்கான தகைமைகளைப் பெற்றிருப்பின் மேலுள்ள ஆறாம் (06) பந்தியின் (ஊ) பிரிவின் பிரகாரம் செயலாற்றுதல் வேண்டும். அவ் வர்த்தமானி அறிவித்தல்களின்படி விண்ணப்பித்துள்ள இவ்வர்த்தமானி அறிவித்தலின்படி தகைமை பெற்றிராத விண்ணப்பதாரிகளுக்கு அவர்கள் செலுத்திய பரீட்சைக் கட்டணங்களை மீள வழங்குவதற்கு பரீட்சைகள் ஆணையாளர் நடவடிக்கையெடுப்பார்.

கலாநிதி சீ. குடாகமகே,
விவசாயப் பணிப்பாளர் நாயகம்.

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**விவசாயத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்பவியல்சார் சேவையில் காணப்படும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பம்**

Application for Open Competitive Examination for Recruitment to the Post of the Sri Lanka Technological Service in the Department of Agriculture

பரீட்சைக்கு தோற்றும் மொழிமூலம் :

| | |
|---|---|
| சிங்களம் | - 2 |
| தமிழ் | - 3 |
| ஆங்கிலம் | - 4 |

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

விண்ணப்பிக்கும் பதவி :

| விண்ணப்பிக்கும் பரீட்சை நிலையம் | குறியீட்டு இலக்கம் |
|---|---|
| | |
| | |
| | |

1. பெயர் :-

1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் குறிப்பிடவும்) :----.
(உதா : SILVA, A. B.)

1.2 முழுப்பெயர் (சிங்களம்/தமிழில்):----.

1.3 தேசிய அடையாள அட்டை இல. :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2. நிரந்தர முகவரி :----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)

2.1 அனுமதி அட்டைகளை அனுப்பவேண்டிய முகவரி :----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)

3. பால் :----.

(ஆண் - 0, பெண் - 1)

(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்)

*3.1* பிறந்த திகதி :-

ஆண்டு : [ | | | ] மாதம் : [ | ] திகதி : [ | ]

*3.2* விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று வயது :-

வருடங்கள் : [ | ] மாதங்கள் [ | ] நாட்கள் [ | ]

4. விவாகமானவரா/விவாகமாகாதவரா ? :----.

விவாகமானவர் - 1
விவாகமாகாதவர் - 2

[ ]

(உரிய இலக்கத்தினை கூட்டி னுள் எழுதவும்)

5. கல்வித் தகைமைகள் :

(அ) க. பொ. த. (சா. த.)/ தேசிய கல்விப் பொதுத் தராதரப்பத்திரம் :

**முதல் அமர்வு :**
பரீட்சையின் பெயர் :----.
ஆண்டும் மாதமும் :----.
பரீட்சை சுட்டெண் :----.
மொழி மூலம் :----.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |

**இரண்டாம் அமர்வு :**
பரீட்சையின் பெயர் :----.
ஆண்டும் மாதமும் :----.
பரீட்சை சுட்டெண் :----.
மொழி மூலம் :----.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |

(ஆ) க. பொ. த. (உ. த.) பரீட்சை :-
ஆண்டும் மாதமும் :----.
பரீட்சை சுட்டெண் :----.
மொழி மூலம் :----.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1.<br>2.<br>3.<br>4. | |

(இ) தொழிற் தகைமைகள் :-

| டிப்ளோமாவும் நிறுவனத்தின் பெயரும் | சித்தியெய்திய வருடம் | பரீட்சை சுட்டெண் | சித்தி யடைந்த பாடங்கள் | தரம் |
|---|---|---|---|---|
| | | | | |

6. கடமையாற்ற விரும்பும் மாவட்டமும் பிரிவும் (விவசாயப் போதனாசிரியர் பதவிக்கு மாத்திரம்) — குறியீட்டு இலக்கம்

1. .................................... ........................
2. .................................... ........................
3. .................................... ........................
4. .................................... ........................
5. .................................... ........................

7. (அ)

| | |
|---|---|
| பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இலக்கம் :----. | |
| திகதி :----. | |
| பணம் செலுத்திய தபால் நிலையம் :----. | |

பரீட்சை கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டவும்

(ஆ) 2006.12.15, 2007.02.09 ஆந் திகதிகள் கொண்ட வர்த்தமானி அறிவித்தல்களுக்கேற்ப விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரம் கீழ்குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை வழங்குதல் வேண்டும்.

| பற்றுச்சீட்டு இலக்கம் | செலுத்திய திகதி | தபால் நிலையம் |
|---|---|---|
| | | |

**8.விண்ணப்பதாரியின் உறுதியுரை :**
இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் உண்மையானதும் சரியானவையெனவும் நான் இத்தால் உறுதிமொழிகிறேன். இவ்விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை என்று நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் அறிய நேர்ந்தால் தகுதியற்றவராக்கப்படுவேன் என்பதையும் நியமனம் பெற்ற பின் அந்தத் தவறு கண்டுபிடிக்கப்பட்டால் எவ்வித நட்டஈடுமின்றி பதவியிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன். இப்பரீட்சையின் சகல நிபந்தனைகளையும் விதிகளையும் பேணி நடக்க இணங்குகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

*8.* ***விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :***

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ................................................ எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் இவர் .................................. ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்.

அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரையிட்டு அத்தாட்சிப்படுத்தவும்)
திகதி :----.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,

மேற்கூறிய பரீட்சார்த்தி இப்பரீட்சையை எழுதுவதற்குத் தகுதியுள்ளவர்/தகுதியற்றவர் என உறுதிப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவிப் பெயரும்.

திகதி :----.

*3-406*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.